## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட /முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2015 /2016
(மே -2019)

# TLS 4143 தமிழ் வரலாற்றிலக்கணம்
# Historical Grammar of Tamil

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து **இரு** வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. அ) 'சார்பெழுத்து' என்றால் என்ன? (05 புள்ளிகள்)
   ஆ) சார்பெழுத்துப் பற்றிய கொள்கைகள் காலத்திற்குக் காலம் மாற்றமுற்று வந்திருப்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

2. அ) 'காலம்' குறித்து தொல்காப்பியர் யாது கூறுகின்றார்? (05 புள்ளிகள்)
   ஆ) தமிழில் 'காலம்' உணர்த்தப்பட்டு வந்துள்ள முறையினை விளக்குக. (15 புள்ளிகள்)

3. அ) வேற்றுமை என்றால் என்ன? (05 புள்ளிகள்)
   ஆ) தமிழ் இலக்கண வரலாற்றில் பொருள் அடிப்படையில் வேற்றுமைகள் பெற்று வந்துள்ள மாற்றத்தினை எவையாவது **மூன்று** வேற்றுமைகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

## பகுதி – II

4. தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றிலிருந்து மும்மூன்று நூற்பாக்களைத் தெரிந்து அவ்வவற்றிற் காணப்படும் உரை வேறுபாடுகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. தமிழ் இலக்கண வரலாற்றில் மொழி முதனிலை, மொழி இறுதிநிலை எழுத்துக்கள் மாற்றமுற்று வந்திருப்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் தெளிவுறுத்துக. (20 புள்ளிகள்)

6. தமிழ் இலக்கண வரலாற்றில் 'பதவியல்' பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

7. யாப்பிலக்கண நூல்களுள் 'யாப்பருங்கலம்', 'யாப்பருங்கலக் காரிகை' ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்க. (20 புள்ளிகள்)

*******************************